டி.பி.எம்.மைதீன்கான் தலைமை! நெல்லை மத்திய மாவட்ட

# இளைஞர் அணி சார்பில் கலைஞர் நூலகம் திறப்பு!

## இன்பா.ஏ.என்.ரகு – சு.சுப்பிரமணியன் பங்கேற்பு!

நெல்லை, ஆக. 5 -

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க தி.மு.க. இளைஞர் அணி சார்பில் தமிழ்நாடு முழுவதும் பொதுமக்கள், மாணவ, மாணவிகள், பயன்பாட்டிற்காக நூலகங்கள் திறக்கப்பட்டு வருகிறது.சட்டமன்றத் தொகுதிக்கு ஒரு நூலகம் என்ற அடிப்படையில் நெல்லை மத்திய மாவட்ட இளைஞர் அணி மற்றும் நெல்லை மாநகர இளைஞர் அணி சார்பில் திருநெல்வேலி தொகுதிக்கு நெல்லை மாநகர கழக அலுவலகம் அருகில் கலைஞர் நூலகத்தை மாநில இளைஞர் அணி துணை செயலாளர் இன்பா ஏ.என்.ரகு துவக்கி வைத்தார்.

முதலமைச்சர் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க,இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வழிகாட்டுதலின்படி, நிதி மற்றும் மனிதவள மேம்பாட்டு துறை அமைச்சர் தங்கம் தென்னரசு அறிவுறுத்தலின்படி திருநெல்வேலி சட்டமன்ற தொகுதியில் உள்ள பொதுமக்கள்,மாணவ மாணவிகள் ஆகியோர் பயன்பெறும் வகையில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் நூலகம் திறப்பு விழா நிகழ்வு நெல்லை டவுணில் நடைபெற்றது.

இந்நிகழ்வு நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் டி.பி.எம். மைதீன்கான் தலைமையில், நெல்லை மாநகர செயலாளர் சு.சுப்பிரமணியன், துணை செயலாளர் அப்துல் கையூம், நெல்லை பேட்டை பகுதி செயலாளர் நமச்சிவாயம் கோபி, பாளையங்கோட்டை பகுதி செயலாளர் அன்டன் செல்லத்துரை ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

நிகழ்வில் மாநில இளைஞர் அணி துணை செயலாளர் இன்பா ஏ.என். ரகு பங்கேற்று கலைஞர் நூலகத்தை துவக்கி வைத்தார்.

நிகழ்வில் மாநகர இளைஞர் அணி அமைப்பாளர் கருப்பசாமி கோட்டையப்பன்,மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் பி.எம்.சரவணன், மீரான் மைதீன்சபி அகமது, மிக்கேல், மாநகர இளைஞர் அணி துணை அமைப்பாளர் குருஜெஸி, கழக நிர்வாகிகள் வேங்கை வெங்கடேஷ் ஜவஹர், சுப்பையா, பாஸ்கர்காஜா மைதீன், மாரிமுத்து,சுடலைராஜ், சடாமுனி, மாமன்ற உறுப்பினர் சுப்பிரமணியன், அவதார் ஷாஜகான், ஸ்டார் அப்துல், ஷெட்டி, முத்து, மகாராஜன், கிருஷ்ணகுமார், செந்தில்குமார், விஸ்வநாதன், கணேச பெருமாள், சார்ல்ஸ், சஞ்சய் குமார், பத்மா,சௌந்திரம்,பிந்து, ராஜேஸ்வரி,ஆனி,நர்மதா, பெப்சி சரவணன்,வின்சென்ட் வினோத்,

ஜாகிர் உசேன்,நச்சினார் இனியன், காந்தி,சுப்ரித் சுப்பிரமணியன், மைக் மணி,மில் ஜே குமார்,ராஜா அப்பாஸ், பாபநாசம், மார்க்கெட் நயினார், ஆறுமுகம், சண்முக சுந்தர், பிரேம், பால் கட்டளை சரவணன், வைரமணி, சிவகுமார், வேலாயுதம், கோபால கிருஷ்ணன், சாதிக், வெங்கடேஸ்வரன், மணிகண்டன், அந்தோணி, பீர்ஷா, சாலமோன், தாமிரா கணேசன், முறுக்கு கடை கணேசன், சுடலைகண்ணு,சேக்,சேர்மன்துரை,ஆவின் ராஜ்குமார்,சங்கர் முருகன்,சங்கர் கணேஷ்,ஹாமிம் முஸ்தபா உள்பட கழகத்தினர் பலர் கலந்து கொண்டனர்.

இதற்கான ஏற்பாடுகளை மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் வில்சன் மணித்துரை,துணை அமைப்பாளர் மாயா,மாநகர இளைஞரணி துணை அமைப்பாளர்கள் அலிஃப் மீரான், செல்வம்,இனியன்,அன்பழகன் ஆகியோர் செய்திருந்தனர்.

நிகழ்ச்சி நிறைவில் 27 வது வட்ட செயலாளர் கேபிள் குமரேசன் நன்றி உரையாற்றினார்.

திருச்சி – ஜமால் முகமது கல்லூரி – முதுகலைத் தமிழாய்வுத்துறை சார்பில்

# உமறுப் புலவர் தமிழ்ப் பேரவை - தொடக்க விழா!

## புலவர் செந்தலை ந.கவுதமன் சிறப்புரை!

திருச்சி, ஆக. 5 -

திருச்சி ஜமால் முகமது கல்லூரி (தன்னாட்சி) - முதுகலைத் தமிழாய்வுத் துறை சார்பில் உமறுப் புலவர் தமிழ்ப் பேரவை - தொடக்க விழா நாளை (6.8.2024 - செவ்வாய்க் கிழமை) காலை 11 மணியளவில் கல்லூரியில் அமைந்துள்ள என்.பி. அப்துல்காதர் ஏசி அரங்கத்தில் நடைபெறுகிறது.

இவ்விழாவில் “மண்ணோடு பேசலாம்” எனும் தலைப்பில் தமிழ் இணையக் கல்விக் கழக மதியுரைஞர் - தமிழ்நாடு அரசின் பாவேந்தர் விருதாளர் புலவர் செந்தலை ந.கவுதமன் சிறப்புரையாற்றுகிறார்.

இவ்விழாவில் கல்லூரி முதல்வர், பேராசிரியர்கள், மாணவ. மாணவியர் பங்கேற்று சிறப்பிக்கின்றனர்.



காஞ்சி வடக்கு மாவட்டம் ஆலந்தூர் நகர முன்னாள் நகர மன்ற உறுப்பினரும் மாவட்டப் பிரதிநிதியுமான கே.சி.ராஜேந்திரன் அவர்களின் திருவுருவப்பட திறப்பு நிகழ்ச்சயில் கழக அமைப்பு செயலாளர் – முன்னாள் மாநிலங்களவை உறுப்பினர் ஆர்.எஸ். பாரதி கலந்துகொண்டு படத்தை திறந்து வைத்து மரியாதை செலுத்தினார். இந்நிகழ்ச்சியில் ஆலந்தூர் தெற்குப் பகுதிச் செயலாளர் 12 வது மண்டல குழு தலைவர் என். சந்திரன், வடக்கு பகுதி செயலாளர் பி. குணாளன், மற்றும் ஆலந்தூர் தெற்கு வடக்கு நிர்வாகிகள் ஏ.வேலவன், ஜெ. நடராஜன், பூவராகவன்,மனோகரன், கு. விஜயன்,ந.பழனி, ரங்கன்,நவீன்,வசந்த், கிருஷ்ணமூர்த்தி,ரமணா, நிர்வாகிகள் கலந்து கொண்டு மரியாதை செலுத்தினார்கள்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### மன்னை மிசா கு. பாலகிருட்டிணன்
### ஆகஸ்ட் 5 (2013)



மாணவப் பருவத்திலேயே கழகக் கொள்கைகளில் ஈர்க்கப்பட்டு, கழகம் துவங்கிய காலத்திலேயே உறுப்பினராகி, மன்னார்குடி நகரச் செயலாளர் – மன்னார்குடி வட்டக் கழகச் செயலாளர் – தஞ்சை மாவட்ட பொருளாளர் – திருவாரூர் மாவட்ட அவைத்தலைவர் – பொதுக்குழு உறுப்பினர் என பல பொறுப்புகளை வகித்து, முழுநேர கழகப் பணியாற்றியவர்.

கொத்தங்குடி ஊராட்சி மன்றத் தலைவராகவும், மன்னார்குடி நகர்மன்ற உறுப்பினராகவும், சட்டமன்ற உறுப்பினராகவும் மற்றும் பல்வேறு கூட்டுறவு அமைப்புகளில் பொறுப்பேற்று, அப்பகுதி மக்களின் அன்பைப் பெற்றவர்.

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றதுடன், விலைவாசி உயர்வு எதிர்ப்பு போராட்டத்தில் கடுங்காவல் தண்டனையும் – மிசா கைதியாக ஓராண்டு சிறைத் தண்டனையும் பெற்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

# 17 ஐ.பி.எஸ்., அதிகாரிகள் இடமாற்றம்!

சென்னை,ஆக.5-

சிலை கடத்தல் தடுப்பு பிரிவு டிஜிபி சைலேஷ்குமார் உள்ளிட்ட 17 ஐ.பி.எஸ்., அதிகாரிகள்களை இடமாற்றம் செய்து தமிழ்நாடு அரசு உத்தரவு பிறப்பித்து உள்ளது.

புதிய நியமனம் விவரம் பின்வருமாறு:

சைலேஷ் குமார் - தமிழ்நாடு காவலர் வீட்டு வசதி கழக தலைவர், இயக்குநர்

தினகரன்- சிலை கடத்தல் தடுப்பு பிரிவு( கூடுதல் பொறுப்பு)

செந்தில் குமார் - மேற்கு மண்டல ஐஜி

பவானீஸ்வரி - காவல் தலைமையிட ஐஜி

ரூபேஷ்குமார் மீனா - நெல்லை போலீஸ் கமிஷனர்

மகேந்தர் குமார் ரத்தோட் - சமூக நீதி மற்றும் மனித உரிமை பிரிவு ஐஜி

ராதிகா- சென்னை மத்திய குற்றப்பிரிவு கூடுதல் ஆணையர்

செந்தில்குமாரி- சென்னை, குற்றப்பிரிவு ஐஜி

நஜ்முல் ஹூடா - நவீனமயமாக்கல் பிரிவு ஐஜி

மூர்த்தி - நெல்லை சரக டிஐஜி

பிரவேஷ் குமார்- வட சென்னை சட்டம் ஒழுங்கு இணை ஆணையர்

அபிஷேக் தீக்ஷித் - ரயில்வே டிஐஜி

அபினவ் குமார் - ராமநாதபுரம் சரக டிஐஜி

துரை - காவலர் நலவாழ்வு தலைமையிட டி.ஐ.ஜி.,

தேவராணி - வேலூர் சரக டிஐஜி

சரோஜ் குமார் தாக்கூர் - சென்னை கிழக்கு சட்டம் ஒழுங்கு இணை கமிஷனர்

சாமூண்டிஸ்வரி - காவல் தலைமையிட ஐ.ஜி.,

ஆகியோர் புதிய பொறுப்புக்கு இடமாற்றம் செய்யப்பட்டு உள்ளனர்.

# கும்பகோணத்தில் விழிப்புணர்வு பிரச்சாரம்!

கும்பகோணம், ஆக. 5 –

கும்பகோணம் அரசு மாவட்ட தலைமை மருத்துவமனையில், உலக தாய்ப்பால் வார விழாவை முன்னிட்டு, இந்திய மருத்துவர்கள் சங்கம் மற்றும் தாய்ப்பால் ஊக்குவிப்போர் கூட்டமைப்பு சார்பில் நடைபெற்ற தாய்ப்பால் விழிப்புணர்வு பரப்புரை வாகன பயணத்தை, கும்பகோணம் சட்டமன்ற உறுப்பினர் சாக்கோட்டை க.அன்பழகன் தொடங்கி வைத்தார்.

நிகழ்ச்சியில், கும்பகோணம் மாநகராட்சி துணை மேயரும், மாநகர தி.மு.க. செயலாளருமான சு.ப.தமிழழகன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் குட்டி இரா.தெட்சிணாமூர்த்தி, கும்பகோணம் ஊராட்சி ஒன்றிய துணைப் பெருந் தலைவரும், மத்திய ஒன்றிய தி.மு.க. செயலாளருமான தி.கணேசன்,

கும்பகோணம் கிழக்கு ஒன்றிய தி.மு.க. செயலாளர் ஜெ.சுதாகர், மாநகர துணைச் செயலாளர் எஸ். சிவானந்தம், மண்டல குழு தலைவர் ஜெ.மனோகரன், பகுதி கழக செயலாளர்கள் இரா.செல்வராஜ், இரா. கல்யாண சுந்தரம், டி.வி.கிருஷ்ண மூர்த்தி, மு.கண்ணன், நிலைக் குழு தலைவர்கள் டி.ஆர்.அனந்தராமன், ஆர்.முருகன், ச.பார்த்திபன், மாமன்ற உறுப்பினர் சி.தமிழ்ச்செல்வி, வட்ட செயலாளர்கள் ரஹமத் அலி, திருமலை, மருத்துவ நிலைய அலுவலர் உ.பிரபாகர், கண்காணிப்பாளர் கமரூல் ஜமான், தாய்ப்பால் ஊக்கு விப்போர் கூட்டமைப்பின் ஒருங் கிணைப்பாளர் சாம்பசிவம் மற்றும் ஏராளமானோர் பங்கேற்றனர்.

நிதி ஆயோக் (NITI Aayog) என்பது கானல்நீர்!

# தமிழக முதல்வரின் புறக்கணிப்பு நடவடிக்கை, புதிய விழிப்புணர்ச்சியை இந்தியா முழுமையும் உருவாக்கியுள்ளது!



இந்திய புவியியல் அமைப்பு ஒரு துணைக் கண்டம் என தயக்கமின்றி வரையறுக்கும் அளவிற்கு பல்வேறு கலாச்சாரங்களையும், நாகரிகங்களையும், பல்வேறு மொழிகள் பேசக்கூடிய இனக்குழுக்களை உள்ளடக்கிய நிலப்பரப்பாகும், இருப்பினும், வேற்றுமையில் ஒற்றுமை என்ற உணர்வோடும், உணர்ச்சியோடும் ஆங்கிலேயர்களை எதிர்த்து ஒருமித்த உணர்வோடு தொடர்ந்து தொய்வின்றிப் போராடி அன்னிய ஆதிக்கத்தை அப்புறப்படுத்தி விட்டு, இயல்பாக உருவான அந்த ஒற்றுமை உணர்வோடு இந்த நிலப்பகுதி முழுமையும் ஒரு ஆட்சியின் கீழ் கொண்டு வர வேண்டுமென்ற உயர்ந்த நோக்கத்தோடும், இந்த ஒற்றுமை கிஞ்சிற்றும் குறையாமல் உணர்வை தொடர்ந்து கட்டிக் காக்க வேண்டும் என்ற தொலைநோக்கு சிந்தனையோடும், தேசிய தலைவர்களின் ஆழ்ந்த சிந்தனையை அடிப்படையாகக் கொண்டு அம்பேத்கார் தலைமையில் உருவாக்கப்பட்டதுதான் இந்திய அரசியல் சட்டமாகும்.

இந்தச் சிந்தனையின் வெளிப்பாடாகத்தான் அரசு அதிகாரம் மக்களிடம் இருப்பதை உறுதி செய்து அரசியல் சட்டத்தின் முகவுரையில், இந்தியா என்பது இறையாண்மையுள்ள, சமதர்ம, மதச்சார்பற்ற, ஜனநாயக குடியரசாக இருக்கும் என்றும், இந்த ஆட்சி முறையில் சமூக, பொருளாதார, அரசியல் நீதி வழங்கப்படும் என்றும், மேலும், சுதந்திரமாக சிந்திப்பதற்கும், கருத்துக்களை வெளியிடுவதற்கும், மக்களின் நம்பிக்கைகளுக்கும், அதன் அடிப்படையிலான வழிபாட்டிற்கும், முழுமையான சுதந்திரமுண்டு என்றும், நாட்டில் வாழும் அனைவரும் சமம் என்பதோடு மட்டுமல்லாமல், சமமான வாய்ப்பும் வழங்கப்படும் எனவும், நாட்டுமக்கள் தனிமனித உரிமைகளை ஒவ்வொருவரும் பெற்று சுயமரியாதையோடும், சகோதரத்துவ உணர்வோடும் வாழ்வதற்கான உரிமைகள் உறுதி செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு உறுதி அளிக்கப்பட்ட இந்த உரிமைகள் மீறப்படுமேயானால், அதற்கு காரணமான அரசியல் சக்திகளை தடுத்து, அப்புறப்படுத்தும் மாபெரும் சக்தியாக இருப்பது இந்திய நாட்டு மக்கள் சக்திதான்! இந்திய அரசியல் சட்டத்தின் இந்த நோக்கங்களையும், திட்டங்களையும் ஆட்சிப்பொறுப்பில் உள்ளவர்கள் புரிந்து கொள்ளவில்லையென்றாலும் அல்லது அந்த நோக்கங்களையும், திட்டங்களை யும் வேண்டுமென்றே சிதைக்க முற்பட்டாலும், மக்கள் சக்தியின் கடும் கோபத்திற்கு ஆளாக நேரிடும் என்பதே, இந்திய அரசியல் சட்டம், ஒன்றிய ஆட்சிப் பொறுப்பிலே உள்ளவர்களுக்கு உணர்த்தும் பாடமும், படிப்பினையுமாகும்! இந்திய அரசியல் சட்டமென்னும் கலங்கரை வெளிச் சத்தில் பிரதமர் நரேந்திரமோடி தலைமையில் இயக்கப்படும் தேசிய ஜனநாயகக் கூட்டணி (NDA) என்ற ஒன்றிய ஆட்சிக் கப்பல் பாதுகாப்பாக கரை சேருமா என்பதுதான் மக்கள் மத்தியிலே இன்றைய தினம் பூதாகரமாக எழுந்துள்ள மிகப்பெரிய கேள்வியாகும்.

**பொன்.முத்துராமலிங்கம்,**
முன்னாள் அமைச்சர்,
உயர்மட்ட செயல்திட்டக்குழு
உறுப்பினர்



2014 ஆம் ஆண்டு பாரதிய ஜனதாக் கட்சி தனிப் பெரும்பான்மையோடு பிரதமர் நரேந்திரமோடி ஒன்றிய ஆட்சியைத் தொடங்கினார். இதனைத் தொடர்ந்து 2019 ஆம் ஆண்டு பாரதிய ஜனதாக் கட்சி தனிப்பெரும்பான்மையோடு இரண்டாவது முறையாக நரேந்திரமோடி பிரதமராக தேர்ந்தெடுக்கப்பட்டு ஆட்சியில் தொடர்ந்தார். ஆனால், மூன்றாவது முறையாக 2024 ஆம் ஆண்டு நடைபெற்ற, இந்த நாடாளுமன்றத் தேர்தலில் பாரதிய ஜனதாக் கட்சிக்கு தனிப்பெரும்பான்மை இல்லாமையால், ஐக்கிய ஜனதாத் தளம், தெலுங்கு தேசம் ஆகிய கட்சிகளை உள்ளடக்கிய, தேசிய ஜனநாயகக் கூட்டணியின் (NDA) சார்பாக நரேந்திர மோடி அவர்கள் பிரதம அமைச்சராக பொறுப்பேற்றுள்ளார்.

இந்த நாடாளுமன்றத் தேர்தல் மூலம் பாரதிய ஜனதாக் கட்சிக்கும், பிரதமர் நரேந்திரமோடிக்கும் முதல் கட்ட எச்சரிக்கையை மக்கள் கொடுத்துள்ளார்கள், ஆம்! தன்னை திருத்திக் கொள்வார் என்கின்ற நம்பிக்கையோடு ஆனால், பிரதமர் நரேந்திரமோடி தன்னைத் திருத்திக் கொள்வது போலவும், இனி அரசியல் சட்டப்படி நடப்பேன் என்பது போன்ற ஒரு தோற்றத்தை உருவாக்கினாரேயல்லாமல், உள்ளதாலும், சிந்தனையாலும் அவர் கிஞ்சிற்றும் மாற வில்லை என்பது, அவருடைய தொடர் நடவடிக்கைகள், நமக்கு உறுதிப்படுத்துகின்றன.

நரேந்திரமோடி பிரதமராகப் பொறுப்பேற்ற பின்னர் நாடாளுமன்றத்தில் நிதியமைச்சர் நிர்மலாசீத்தாராமன் மூலம், நாடாளுமன்றத்தில் வைக்கப்பட்ட நிதிநிலை அறிக்கை நடுநிலை அறிக்கையாக இல்லாமல் பாரபட்சமான நிதிநிலை அறிக்கையாவும், பழிவாங்கும் நிதிநிலை அறிக்கையாகவும் அமைந்துள்ளதாகவே மக்கள் மதிப்பீடு செய்கிறார்கள். தமிழ்நாட்டின் முதலமைச்சர் இந்த நிதிநிலை அறிக்கை ஒன்றிய நிதிஅமைச்சரால் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டவுடன், இந்த நிதிநிலை அறிக்கைப் பற்றி தமிழ்நாட்டின் முதலமைச்சர் விமர்சிக்கும் பொழுது, இது நரேந்திரமோடியின் ஆட்சியை காப்பாற்றும் சுயநலத்தோடும், தங்களுக்கு சாதகமில்லாத மாநிலங்களை பழிவாங்கும் நோக்கத்தோடும், குறிப்பாக தமிழ்நாட்டை எல்லா வகையிலும் பழிதீர்க்கும் நிதிநிலை அறிக்கையாகத் தான் உள்ளது என்று குறிப்பிட்டுள்ளார்.

எதிர்க்கட்சிகளை சார்ந்த முதலமைச்சர்களின் மாநிலங்களுக்கு உரிய நிதி வழங்கவில்லை. மாறாக, ப.ஜ.க. ஆட்சி அமைப்பதற்கு துணையாக இருந்த பீகாருக்கும், ஆந்திரப் பிரதேசத்திற்கும் அதிகமான நிதி வழங்கப்பட்டுள்ளது. ஆனால், நியாயமான காரணங்கள் இருந்தும், தொடர்ந்து கோரிக்கைகளை வலியுறுத்திய நிலையிலும் தமிழ்நாடு உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் ஆட்சி செய்யும் மாநிலங்களுக்கு அவசிய தேவைகளுக்குக் கூட நிதி ஒதுக்கீடு செய்யவில்லை. குறிப்பாக, தமிழ்நாட்டின் முதலமைச்சர் தொடர்ந்து கோரிக்கை விடுத்த திட்டங்களான மெட்ரோ ரயில் திட்டத்திற்கும் நிதி ஒதுக்கவில்லை. வரி பங்கீடும் முறையாக செய்யவில்லை. புதிய ஒன்றிய அரசின் திட்டங்கள் எதுவும் அறிவிக்கபடவுமில்லை.

தமிழ்நாட்டுக்கு பலமுறை வருகை தந்த பிரதமர் நரேந்திரமோடி தமிழ் மக்கள் மீதும், தமிழ் மொழி மீதும் அவர் காட்டிய ஆர்வம், அக்கறை ஆகிய உணர்வுகளுக்கு மதிப்பளிக்கும் வகையில் நிதிநிலை அறிக்கையில் தமிழ்நாட்டுக்கு பிரதமர் நிதி வழங்கியிருக்கிறாரா(?) என்றால், இல்லை என்பது மட்டுமல்ல, தமிழ்நாடு என்ற சொல்லே நிதிநிலை அறிக்கையில் இடம்பெறவில்லை என்பதுதான் உண்மை!! எனவே, பிரதமர் நரேந்திரமோடி அரசியல் காரணங்களுக்காக தமிழ்நாட்டை வஞ்சிக்கிறார், பழிதீர்த்துக் கொள்கிறார் என்பதை தவிர வேறு என்ன விளக்கம் தர இயலும். பிரதமர் நரேந்திரமோடியின் இந்த கடும் கோபத்திற்கு காரணம் “தமிழ்நாட்டின் நாடாளுமன்ற தேர்தலில் இந்தியா (INDIA) கூட்டணியின் 40க்கு 40 வெற்றிதான்!”

இந்த சூழ்நிலையில் நிதி ஆயோக் (NITI Aayog) கடந்த 27.7.2024 பிரதம அமைச்சர் நரேந்திரமோடி தலைமையில் கூட்டப்பட்டது. இதில் கலந்து கொள்ள வேண்டியவர்கள் 26 முதலமைச்சர்கள் என்றால், அதில் பத்து முதலமைச்சர்கள் கலந்து கொள்ளவில்லை. குறிப்பாக ஜனநாயக கூட்டணியில் அங்கம் பெற்ற பீகார் முதலமைச்சர் நிதிஷ்குமார் கலந்து கொள்ளவில்லை. புதுவையில் பா.ஜ.க. ஆதரவுடன் முதலமைச்சராக பொறுப்பேற்றுள்ள ரங்கசாமியும் கலந்து கொள்ளவில்லை. இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்ட மேற்கு வங்க முதலமைச்சர் மம்தா பானர்ஜியும், தனக்கு உரிய கால அவகாசம் வழங்கப்படவில்லையெனத் தெரிவித்து வெளிநடப்பு செய்துவிட்டார்.

இத்தகைய சூழ்நிலையில், தமிழ்நாட்டின் முதலமைச்சர் இந்த நிதி ஆயோக் (NITI Aayog) கூட்டத்தில் கலந்து கொள்ளவில்லை என்று தேசிய ஜனநாயகக் கூட்டணி கட்சியை சார்ந்தவர்களும், ஒன்றிய அமைச்சர்களும், தலைவர்களும் குறைபட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதுமட்டுமல்ல குற்றச்சாட்டாக பொது வெளியில் தெரிவித்து வருகிறார்கள் . அப்படி குறைபட்டு கொள்பவர்களும், குற்றம் சாட்டுபவர்களும் இன்றைய நிதி ஆயோக் (NITI Aayog) பற்றிய வரலாற்றை புரிந்து கொண்டு பேசுகிறார்களா(?) என்பது ஐயப்பாட்டிற்குரியதாகும். ஏற்கனவே செயல்பட்டு கொண்டிருந்த திட்டக்குழு (Planning Commission) கூட்ட த்திற்கு மாநில முதலமைச்சர்கள் அழைக்கப்பட்டு, அந்தந்த மாநிலங்களின் வரிவருவாய், புதிய திட்டங்கள், மாநிலங்களுக்கான நிதி ஒதுக்கீடுகள் ஆகிய அம்சங்கள் குறித்து விரிவாக விவாதிக்கப்படும். அந்த விவாதங்களின் பிரதிபலிப்பும், முடிவுகளுமே நிதிநிலை அறிக்கையின் வெளிப்பாடாக இருக்கும்.

ஆனால், தற்பொழுது பிரதமர் நரேந்திர மோடியால் 2014ஆம் ஆண்டு அவர் பிரதமராக தேர்ந்தெடுக்கப்பட்டவுடன் திட்டக்குழு (Planning Commission) கலைக்கப்பட்டு, அதற்கு பதிலாக நிதி ஆயோக் (NITI Aayog) என்கின்ற இந்த புதிய அமைப்பு உருவாக்கப்பட்டது. இந்த நிதி ஆயோக் (NITI Aayog) அமைப்பிற்கு எவ்வித அதிகாரமுமில்லை, விரிவான விவாதங்களுக்கும் அனுமதியில்லை. மாறாக, இது ஓர் சிந்தனை குலாம் (Think Tank) இந்தக் குழுவில் இன்றுள்ள சூழ்நிலையில் விவாதங்களின் மூலம் எந்த மாற்றங்களையும் உருவாக்கிடவியலாது. விரிவான விவாதங்களுக்கும் வாய்ப்பில்லை, தேசிய நெடுஞ்சாலைகளில் “சற்றே இளைப்பாறும் விடுதி” (Rest awhile) இருப்பது போலதான், இந்த அமைப்பும் பயன்படுகிறது. இந்த ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை நாடாளுமன்றத்திலே சமர்ப்பிக்கப்பட்ட பின்னர்தான், இந்த நிதி ஆயோக் கூட்டம் சம்பிரதாயத்திற்காக கூட்டப்பட்ட தாகதான் புரிந்து கொள்ள முடிகிறது.

இன்றைய நிதி ஆயோக் (NITI Aayog) அமைப்பு பற்றியும், செயல்முறை பற்றியும் இந்து ஆங்கில நாளிதழில் 29/7/2024 ஆம் தேதி தலையங்கத்தில் இந்த அமைப்பு முறையாகப் பயனுள்ள வகையில் கட்டமைக்கப்படவில்லை என்ற தலைப்பில் (The NITI Aayog suffers from both structural and functional issues) வெளிவந்துள்ளது. எந்த நோக்கத்தின் அடிப்படையில் திட்டக்குழு (Planning Commission) கலைக்கப்பட்டு, தலைகீழ் மாற்றமாக நிதியோக் (NIYI Aayog) தேசிய ஜனநாயகக் கட்சியின் ஆட்சியில் பிரதமர் நரேந்திரமோடியால் உருவாக்கப்பட்டது. ஆனால், நடைமுறையில் எப்படி இந்த அமைப்பு எதிர்விளைவுகளை உருவாக்கியிருக்கிறது என்பதை “இந்து” தலையங்கம் தெளிவுபடுத்துகிறது. [Constituted by the NDA government in its first term, the NITI Aayog was to replace the Planning Commission, doing away with the “topdown” approach of the earlier body, and to focus on “cooperative federalism”. But by limiting itself to an advisory body without any powers of resource distribution or allocation to States and other bodies and focusing on creating indices to evaluate States, it has led to the unintended consequence of “competitive federalism”; (Hindu, Date 29/07/2024, page No - 8) ]

பிரதமர் நரேந்திரமோடி திட்டக்குழுவை நிதி ஆயோக்காக மாற்றுவதற்கு மாநிலங்களின் கூட்டுறவு கூட்டாச்சியை நோக்கமாகக் கொண்டது என்று விளக்கமளித்தார். ஆனால், நடைமுறையில் எதிர்மறையான விளைவுகளையே இந்த நிதி ஆயோக்குழு உருவாக்கியிருக்கிறது என்பதை இந்துபத்திரிக்கையே தெளிவுபடுத்தியிருக்கும் நிலையில், தமிழக முதல்வர் மேற்கொண்ட நிதி ஆயோக் புறக்கணிப்பு முடிவு என்பது மக்களால் பாராட்டப்படுவதோடு, ஏனைய மாநிலங்களுக்கு வழிகாட்டும் கலங்கரை விளக்கமாகவும் அமைந்துள்ளது.